2010 மே 3]

இணைப்பு –VI

(565 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

கோரிக்கை எண் 27–தொழில் துறை

அறிவிப்புகள், 2010–2011

1. திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு சேமிப்பு முனையம்

தமிழ்நாட்டில், எரிதிறன்மிக்க, சுற்றுச்சூழல் நேயம் உள்ள உகந்த எரிபொருளான இயற்கை எரிவாயுவின் தேவை 2015 ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 48 மில்லியன் கன மீட்டராக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆயினும், தற்போது, நாளொன்றுக்கு 4.2 மில்லியன் கன மீட்டர் என்ற குறைந்த அளவில்தான் எரிவாயு கிடைக்கிறது. பல்வேறு பயன்களுக்கான நீண்டகாலத் தேவைகளுக்காக இயற்கை எரிவாயு கிடைப்பதை உறுதி செய்யும் பொருட்டு, எண்ணூர் துறைமுகத்துக்கு அருகில், ஆண்டொன்றுக்கு 5 மில்லியன் டன் நிறுவுத்திறன் கொண்ட திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயுவை (Liquefied Natural Gas) சேமித்து வைக்கக்கூடிய முனையம் ஒன்றினை இந்திய எண்ணெய் நிறுவனத்துடன் (Indian Oil Corporation Limited) இணைந்து அமைத்திடவும், அந்த முனையத்திலிருந்து, நாளொன்றுக்கு கிடைக்கக்கூடிய 20 மில்லியன் கன அடி ஆவியாக்கப்பட்ட எரிவாயுவை விநியோகம் செய்வதற்காக குழாய்வழி உட்கட்டமைப்பினை கூட்டு முயற்சியில் அமைத்திடவும், மின் உற்பத்தி நிலையம் ஒன்றினை அமைத்திடவும் சுமார் ரூ. 10,000 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் நடவடிக்கை மேற்கொள்ளும்.

2. மாநிலம் தழுவிய எரிவாயுக் கட்டமைப்பு

எரிவாயுப் பயன்பாட்டினை அதிகரிக்க, தேசிய இயற்கை எரிவாயுக் கட்டமைப்புடன் மாநிலம் தழுவிய எரிவாயுக் கட்டமைப்பினை உருவாக்கி ஒன்றிணைக்க வேண்டியது அவசியமாகிறது. ரூ.3,000 கோடி செலவில், 800 கிலோ மீட்டர் நீளம் கொண்ட கொச்சி—பெங்களூரு எரிவாயுக் குழாய் அமைப்பினை இந்திய எரிவாயு ஆணைய நிறுவனம் (Gas Authority of India Limited) செயல்படுத்தி வருகிறது. இதில் 1,000 கோடி ரூபாய் செலவிலான 300 கிலோ மீட்டர் நீளம் கொண்ட குழாய்

[2010 மே 3

அமைப்பு, கோயம்புத்தூர், ஈரோடு, சேலம், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள் வழியாகச் செல்லும். இம்மாவட்டங்களில் உள்ள நுகர்வோர்களுக்கு, இக்குழாய் வழி அமைப்புமூலம், கொச்சியிலுள்ள எல்.என்.ஜி. முனையத்திலிருந்து 2012 ஆம் ஆண்டு முதல் இயற்கை எரிவாயு கிடைக்கும். இயற்கை எரிவாயு குழாய் அமைப்புகளை கட்டுவதற்காக, இந்திய எரிவாயு ஆணைய நிறுவனத்துடன் இணைந்து கூட்டு முயற்சியில் இத்திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் எடுக்கும்.

3. சென்னை விளையாட்டு நகரம்

'தகவல் தொழில்நுட்பப் பெருவழிச்சாலை' (Information Technology Corridor) யான இராஜீவ் காந்தி சாலையைச் சுற்றிலும் விரைந்த வேலைவாய்ப்புகள் உருவாகி வருவதால், இதை அடுத்துள்ள பகுதிகளில் சமூக உட்கட்டமைப்புகளை மேம்படுத்துவது அவசியமாகிறது. ஆகவே, சுமார் 1,500 ஏக்கர் நிலப்பரப்பில் சென்னை விளையாட்டு நகரம் என்ற ஒரு பெருந் திட்டம் செயல்படுத்தப்படும். இந்நகரத்தில், பன்னாட்டுத் தரத்திலான பல்வகைப் பயன்பாடுகள் கொண்ட வெளி மற்றும் உள் விளையாட்டு அரங்குகள், பயிற்சிப் பள்ளிகள், விளையாட்டு வசதிகள், விளையாட்டு வீரர்களுக்கான விடுதிகள், விளையாட்டு மருத்துவ மையங்கள் போன்றவைகள் உருவாக்கப்படும்.

4. பன்னாட்டு தரமிக்க கோல்ஃப் மைதான வசதி

மாநிலத்தில் முதலீடு செய்ய பல பன்னாட்டு நிறுவனங்களை தமிழ்நாடு ஈர்த்துள்ளது. எனவே, தமிழகத்தை உகந்த இடமாக பன்னாட்டு முதலீட்டாளர்கள் கருதி பார்ப்பதற்கு, உலகத்தரம் வாய்ந்த வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது அவசியமாகிறது. ஏற்கெனவே, கடந்த சில ஆண்டுகளாக, ஜப்பான், கொரியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளிலிருந்து பல வெளிநாட்டினர் சென்னைக்கு வந்து பணிபுரிகின்றனர். அவர்களிடையே கோல்ஃப் விளையாட்டு பிரபலமாக உள்ளது. தவிர, இதன்மூலம் மாநிலத்தில் சுற்றுலாவும் வளர்ச்சி பெறும். இத்தகைய வசதிக்கான தேவையையும், சமூக உட்கட்டமைப்புக்கான தேவையையும் கருத்தில் கொண்டு சுமார் 200 ஏக்கர் பரப்பில் உலகத் தரத்திலான கோல்ஃப் மைதானம் ஒன்றினை தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் அமைக்கும்.

2010 மே 3]

5. உணவுப் பொருள் பதப்படுத்துதல் துறைக்கான சிறப்புப் பொருளாதார மண்டலம்

தூத்துக்குடி மாவட்டத்தில் ரூ.550 கோடி மதிப்பீட்டில் சுமார் 425 ஏக்கர் பரப்பளவில், சுமார் 10,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கவல்ல உணவுப் பொருள் பதப்படுத்துதல் துறைக்கான சிறப்புப் பொருளாதார மண்டலம் ஒன்றினை தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் கூட்டு முயற்சியில் அமைக்கும்.

6. உயிரி தொழில்நுட்ப உபகரண வசதி—உயிரி தொழில்நுட்ப ஆதார மையம்

2006-2007 ஆம் ஆண்டு வேளாண்மைத் துறையில் உற்பத்தித்திறனை அதிகரிக்கவும், மருத்துவத் துறையில் பல்வேறு நோய்களுக்கு புதிய மருந்துகளைக் கண்டறியவும் பயன்படும் உயிரியல் தொழில்நுட்பத் துறைக்கு உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி மையம் ஒன்றை இவ்வரசு அமைக்கும் என அறிவிக்கப்பட்டது. இதற்கென அரசாணையில் ஒப்பளிப்பு செய்யப்பட்ட ரூ.1 கோடி மானியத்தைப் பெற்று வேளாண்மை இயக்குநர், டைசல் பையோ பார்க் லிமிடெட்க்கு வழங்கப்பட்டது. இந்தத் திட்டத்தை மேலும் சிறப்பாக விரிவுபடுத்தும் நோக்கத்தில் தற்போது தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனமும் டைடல் பூங்கா நிறுவனமும் இணைந்து கூட்டு முயற்சியில் அமைத்துள்ள டைசல் உயிரி தொழில்நுட்பப் பூங்கா நிறுவனம், உயிரி தொழில்நுட்ப உபகரண வசதியையும், உயிரி தொழில்நுட்ப ஆதார மையத்தையும் டைசல் உயிரி தொழில் பூங்கா-II திட்டத்தின்கீழ் 19.30 கோடி ரூபாய் செலவில் அமைக்கும். இதில் நுண் உயிரியல் சோதனைக் கூடம் (Micro Biology Lab) மூலக்கூறு சோதனைக் கூடம் (Molecular Lab), நொதித்தல் ஆய்வுக் கூடம் (Fermentation Lab), துணைப் பொருட்கள் செய்முறை சோதனைக் கூடம் (Downstream Processing Lab), சுத்திகரிப்பு சோதனைக் கூடம் (Purification Lab), பகுத்தாய்வு சோதனைக் கூடம் (Analytical Lab) மற்றும் விலங்கின நுண் உயிர் பகுப்பாய்வுக் கூடம் (Animal Cell Culture Lab) போன்றவை உள்ளடக்கியதாக இருக்கும். இவ் வசதிகள் இந்திய அரசின் உயிரி தொழில்நுட்பத் துறையின் உடனுழைப்புடன் செயல்படுத்தப்படும்/ தமிழ்நாட்டிலுள்ள உயிரி தொழில்நுட்ப ஆராய்ச்சி நிலையங்கள், தொழில் முனைவர்கள் மற்றும் தொழில் நிறுவனங்கள் ஆகியவை வெற்றி அடைவதற்கான வாய்ப்புகளை அதிகரிக்க, இந்த உயிரி

[2010 மே 3

தொழில்நுட்ப ஆதார மையம் தனது ஆதார வசதிகளை அவற்றுக்கு அளித்து வழி நடத்தும்.

7. சென்னை வர்த்தக மைய விரிவாக்கம்

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனமும், இந்திய அரசின் இந்திய வர்த்தக வளர்ச்சி அமைப்பும் இணைந்து கூட்டு முயற்சியில் அமைத்துள்ள சென்னை வர்த்தக மையத்தில் மூன்று கண்காட்சி அரங்குகளும், ஒரு கருத்தரங்கு மையமும் உள்ளன. இம்மையத்தில் கூடுதலாக, 5 இலட்சம் சதுர அடி பரப்புள்ள கண்காட்சி இடம், பல அடுக்கு கார் நிறுத்தம், உணவுக்கூடம் போன்ற வசதிகளை இந்திய வர்த்தக வளர்ச்சி மையத்துடன் இணைந்து ரூ.320 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

8. கிரானைட் செய்முறைத் தொழில்கள் சார்ந்த சிறப்புப் பொருளாதார மண்டலம்

சிப்காட் நிறுவனத்தின் பர்கூர் தொழில் வளாகத்தில் உள்ள நிலத்தை நல்ல முறையில் பயன்படுத்திடவும், இதைச் சுற்றி அமைந்துள்ள பகுதிகளில் உள்ள மனித ஆற்றல் மற்றும் அப்பகுதியில் பெருமளவு கிடைக்கப் பெறுகின்ற கிரானைட் படிமங்களை பயன்படுத்தும் நோக்கிலும், கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி வட்டம், பர்கூரில் உள்ள சிப்காட் தொழில் வளாகத்தில் சுமார் 379 ஏக்கர் நிலப்பரப்பில் கிரானைட் செய்முறைத் தொழில்கள் மற்றும் இதர துணை இயந்திரங்கள் உற்பத்தித் தொழிற்சாலைகள் ஆகியவற்றுக்கான சிறப்புப் பொருளாதார மண்டலம் ஒன்றினை அரசு அமைக்கும். இச்சிறப்புப் பொருளாதார மண்டலம் சுமார் ரூ.500 கோடி முதலீட்டை ஈர்ப்பதோடு, 4,000 பேருக்கு வேலை வாய்ப்பினையும் உருவாக்கும்

9. விழுப்புரம் மாவட்டத்தில் புதிய தொழில் பூங்கா

மாநிலம் முழுவதும் சீரான தொழில் வளர்ச்சி ஏற்படுவதை உறுதி செய்வது இந்த அரசின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய விழுப்புரம் மாவட்டத்தில், திண்டிவனம் வட்டம், கீழ்வெண்மணியாத்தூர், கொள்ளார் மற்றும் பெலாகுப்பம் கிராமங்களில் உள்ள சுமார் 450 ஏக்கர் நிலத்தில் ஒரு புதிய தொழிற்பூங்காவினை சிப்காட் நிறுவனம் அமைக்கும். மேலும், தொழில் பெருவழிச்சாலையாக (Industrial Corridor)

2010 மே 3]

மேம்படுத்தப்பட்டு வருகின்ற சென்னை-இராணிப்பேட்டை-ஓசூர் வழிச்சாலையில் திருப்பெரும்புதூர் வட்டத்தில் உள்ள மதுரமங்கலம், மகாதேவிமங்கலம், கண்ணன்தாங்கல் ஊரகப் பகுதியில் சுமார் 1,000 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு தொழில் பூங்கா அமைக்கப்படும்.

10. உட்கட்டமைப்பு வசதிகளை தரம் உயர்த்துதல்

சிப்காட் தொழில் பூங்காக்களில் உலகத் தரத்திலான உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கவும் / தரமுயர்த்தவும், இவ்வாண்டில் சிப்காட் நிறுவனம் ரூ.200 கோடி செலவிடும்.

11. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் புதிய கிளை அலுவலகம்

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் சிவகாசியில் தனது 30-வது கிளையினை அமைக்கும். இதன்மூலம் சிவகாசி வட்டம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள இடங்களில் உள்ள தொழில் முனைவோர்கள் பயனடைவர்.

12. தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தின் சுரங்க மேம்பாட்டுப் பணிகள்

மாநிலத்தில் சிமெண்ட் உற்பத்தித் தொழிலில் தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்திற்கு ஒரு சிறப்பான இடம் உண்டு. ரூ.115 கோடி செலவில் தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தின் சிமெண்ட் உற்பத்தி நவீன மயமாக்கப்படுகிறது. தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தின் ஆலங்குளம் சிமெண்ட் ஆலையில் உள்ள நான்கு சுரங்கங்களில் ரூ.50 கோடி செலவில் சுரங்க மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும். அரியலூர் சிமெண்ட் ஆலையில் ரூ.7.50 கோடி மதிப்பீட்டில் மாசு சுத்திகரிக்கும் இயந்திரங்கள் (Electro Static Precipitators) நிறுவப்படும். கிளிங்கர் குளிர்விப்பானிலிருந்து வெளியாகும் வெப்ப சக்தியை சேமிக்கும் வகையில், வெப்ப சக்தியை மீட்கும் அமைப்பும் (Waste Heat Recovery System) ரூ.2.5 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

13. சுற்றுச்சூழல் / எரிசக்தி சார்ந்த ஆய்வுகள்

சுற்றுச்சூழலைப் பாதுகாத்து தொடர்ந்த வளர்ச்சியை அடைய வேண்டிய அவசியம் நேரிட்டுள்ளது. அதன்படி (1) எந்தெந்த

[2010 மே 3

பகுதிகளில் கார்பன் வெளிப்படுவதை குறைக்கலாம் என்பதைக் கண்டறிய தூய்மை வளர்ச்சி முறை குறித்த ஆய்வு (2) அரியலூர் சிமெண்ட் ஆலையில் இருந்து வெளியேறும் கரியமில வாயுவைக் கண்டறிந்து நிலக்கரியின் எரிதிறனை மேம்படுத்தக்கூடிய 'நிலக்கரி சுத்தப்படுத்தும் தொழில்நுட்பத்தை' செயல்படுத்தும் ஆய்வு (3) கழிவு எண்ணெய் மற்றும் மிருதுவான மண்ணை மாற்று எரிபொருளாக (Alternative Fuel) பயன்படுத்துவதற்கான ஆய்வு, மற்றும் (4) மரபுசாரா எரிசக்தி ஆதாரங்களை மேம்படுத்தும் வகையில் திருப்பூர் மாவட்டத்தில் உள்ள புதுப்பாளையம் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள கூளநாயக்கன்பட்டி ஆகிய கிராமங்களில் காற்றாலைகள் (Wind Mills) நிறுவுவது குறித்த ஆய்வு ஆகிய நான்கு ஆய்வுகள் தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும்.

14. தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தில் வீழ்படிவு கால்சியம் கார்பனேட் ஆலை

ஆலைப் பகுதிக்குள் வீழ்படிவு கால்சியம் கார்பனேட் உற்பத்தி செய்வதற்காக, பன்னாட்டு உடனுழைப்புடன் கட்டுதல் - சொந்தமாக்குதல் - செயலாக்குதல் (Build-Own-Operate) அடிப்படையில் ரூ.35 கோடி முதலீட்டில் ஒரு ஆலையை தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் அமைக்கும். இதனால் சுமார் 1,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். மேலும், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்திற்கு, ஆண்டுதோறும் ஏற்படக்கூடிய ரூ.25 கோடி தொடர் செலவினம் குறையும்.

15. ஒருங்கிணைந்த ஆதாரத் திட்டமிடல் முறை

2011-2012 ஆம் ஆண்டில் ஆண்டொன்றிற்கான விற்றுமுதல் ரூ.2,000 கோடியாக உயரும் வகையில் ஆலை விரிவாக்கத் திட்டத்தினை தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் செயல்படுத்தி வருகிறது. கூடுதலான வேலைப் பளுவினை திறம்பட எதிர்கொள்வதற்கும், வேலைத்திறனை மேம்படுத்துவதற்கும், தற்போது நடைமுறையில் உள்ள ஒருங்கிணைந்த நேரிடை தகவல் தொழில்நுட்ப முறைக்கு பதிலாக (Online Integrated Information System) 'ஒருங்கிணைந்த ஆதாரதிட்டமிடல் முறையை' (Enterprise Resource Planning) ரூ.12 கோடி செலவில் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் நடைமுறைப்படுத்தும். இத்திட்டம் 2011 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் நிறைவடையும்.

2010 மே 3]

16. மரக்கூழ் மரங்கள் பயிரிடும் திட்டத்தை மேம்படுத்துதல்

25,000-க்கும் மேற்பட்ட விவசாயிகளை ஈடுபடுத்தி, ஒரு இலட்சம் ஏக்கரில் மரக்கூழ் மரங்கள் பயிரிடும் திட்டத்தை தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் 2012-2013 ஆம் ஆண்டுக்குள் செயல்படுத்தும். இதனால், பெருமளவு வேலைவாய்ப்பு உருவாவது மட்டுமின்றி கிராமப்புற விவசாயிகளுக்கு ஆண்டொன்றுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.5000 வரை வருவாய் கிடைப்பது உறுதி செய்யப்பட்டு அவர்களின் வாழ்க்கைத் தரமும் மேம்படும்.

17. புதிய தூய்மை வளர்ச்சித் திட்டங்கள்

தற்போதுள்ள இரண்டு தூய்மை வளர்ச்சி செய்முறை திட்டங்களோடு மேலும் மூன்று தூய்மை வளர்ச்சித் திட்டங்களை அதாவது, இரசாயன மீட்பு கொதிகலனில் உள்ள எரிசக்தித் திறனை மேம்படுத்துதல், ஆலைகழிவிலிருந்து பயோகேஸ் தயாரித்து உலை எண்ணெய் உபயோகத்தைக் குறைத்தல் மற்றும் காற்றாலை நிறுவுத்திறனை அதிகரித்தல் ஆகிய திட்டங்களை தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் மேற்கொள்ளும். இத்திட்டங்கள், 2011 முதல் ஆண்டொன்றுக்கு மேலும் 1.50 இலட்சம் சான்றளிக்கப்பட்ட மாசு வெளியேற்ற குறைப்பு அலகுகளை உருவாக்கும். இதனால் ரூ.12 கோடி கூடுதல் வருவாய் கிடைக்கும்.

18. கரும்பு விவசாயிகளின் நலன்

கரும்பு விவசாயிகளின் நலனுக்காக, அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் ரூ.45 இலட்சம் செலவில் ஒரு சமுதாயக் கூடமும், கள்ளக்குறிச்சி-1, கள்ளக்குறிச்சி-2, செய்யாறு, சுப்ரமணிய சிவா, அறிஞர் அண்ணா கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் ரூ.109.60 இலட்சம் செலவில் கான்கிரீட் சாலைகளும், சுப்ரமணிய சிவா மற்றும் கள்ளக்குறிச்சி-2 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் ரூ.69 இலட்சம் செலவில் ஆறு பணியாளர்கள் குடியிருப்பு வளாகங்களும் அமைக்கப்படும்.

19. கிரானைட் கழிவுகளை உருமாற்றுதல்—தமிழ்நாடு கனிம நிறுவனம்

ஊரக மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்காக, தேர்வு செய்யப்பட்ட குவாரிகளில் குவிந்துள்ள கிரானைட் கழிவுகளை கனசதுரம் மற்றும் கனச்செவ்வக கிரானைட் கற்களாக மாற்றும் நடவடிக்கையில் தமிழ்நாடு கனிம நிறுவனம் ஈடுபடும். இதனால் கனிம வளப் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும்

[2010 மே 3

ஊரக வேலைவாய்ப்பு ஆகிய மூன்று வகைப் பயன்களும் கிடைக்கும். மேலும், தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் அனைத்து நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து சீரிய முறையில் கண்காணிக்க இணைய வலைதள அடிப்படையிலான என்டர்பிரைஸ் ரிசோர்ஸ் பிளானிங் (Enterprise Resource Planning) முறையை தமிழ்நாடு கனிம நிறுவனம் மேற்கொள்ளும்.

20. சுரங்கக் குத்தகை மற்றும் கனிம விவரப் பதிவேடு

கனிம அடிப்படையிலான தொழில்கள் வளர்ச்சி அடைவதற்காக, மாநிலத்திலுள்ள கனிம வளம், கனிமவள ஆதாரங்கள், கனிமங்கள் கிடைக்கப்பெறும் இடங்கள், தற்போதுள்ள சுரங்கம் மற்றும் குவாரி குத்தகை உரிமங்கள் போன்றவை தொடர்பான ஒருங்கிணைந்த தகவல்களை வழங்குவதற்கு, நேரடி கணினிமயமாக்கப்பட்ட சுரங்கக் குத்தகை மற்றும் கனிம விவரப் பதிவேடு உருவாக்கப்படும். நேரடி கணினி மயமாக்கப்பட்ட சுரங்கக் குத்தகை மற்றும் கனிம விவரப் பதிவேடு உருவாவதால், குத்தகை உரிமம் வழங்கப்படாத பகுதிகளில் சட்டத்திற்குப் புறம்பாக நடைபெறும் சுரங்கப் பணிகளை கண்டுபிடிக்க பயனுள்ளதாக இருக்கும். முதற்கட்டமாக நேரடி கணினி மயமாக்கப்பட்ட சுரங்கக் குத்தகை மற்றும் கனிம விவரப் பதிவேடு திட்டமானது சேலம், கோயம்புத்தூர், விழுப்புரம், திருநெல்வேலி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் செயல்படுத்தப்படும்.

21. உற்பத்தித் துறையில் தொலைநோக்கு ஆளுமைத் திறன் கொண்ட தலைவர்களை உருவாக்கும் திட்டம்

அதிகமான முதலீடுகளை ஈர்க்கவும், உற்பத்தித் துறையின் பங்களிப்பை மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அளவை 21 விழுக்காட்டிலிருந்து 27 விழுக்காடாக அதிகரிப்பதற்கான இலக்கினை அடையவும், மாநில உற்பத்திப் போட்டித் திறன் மன்றம் அமைப்பது உள்ளிட்ட பல்வேறு முயற்சிகளை தமிழக அரசு எடுத்து வருகிறது. மேலும், மாநிலத்தின் உற்பத்திக் கலாச்சாரத்தை வலுப்படுத்தும் வகையில், தேசிய உற்பத்தி போட்டித் திறன் மன்றத்தின் திட்டமான "உற்பத்தித் துறையில் தொலைநோக்கு ஆளுமைத் திறன் கொண்ட தலைவர்களை உருவாக்குதல்" (Visionary Leaders for Manufacturing Programme) என்ற திட்டத்தை தமிழ்நாட்டில் தமிழக அரசு செயல்படுத்தும். தமிழ்நாட்டில்

2010 மே 3]

உற்பத்தித் திறனை வலுப்படுத்துவதற்காக, மாநிலத்தில் 2012 ஆம் ஆண்டுக்குள் 200 வி.எல்.எப்.எம். பட்டதாரிகளை உருவாக்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

22. தமிழ்நாடு ஏற்றுமதி போட்டித்திறன் குழு

தமிழ்நாடு தொழிலகச் சங்கங்களின் முன்னணி வல்லுநர்கள், ஏற்றுமதி மன்றம் மற்றும் முன்னணி ஏற்றுமதிச் சங்கங்கள் உள்ளிட்ட முன்னணி வல்லுநர்கள் அடங்கிய 'தமிழ்நாடு ஏற்றுமதி போட்டித்திறன் குழு' (Tamil Nadu Export Competitiveness Committee) ஒன்றினை தமிழக அரசு அமைக்கும். தொழில்நுட்ப உதவி அளித்தல், ஏற்றுமதிக்கான போட்டித்திறனை உண்டாக்குதல் உலக ஆதார அமைப்புகள் மற்றும் பன்னாட்டு வர்த்தகத் தூதர்கள் வரவிற்கு ஏற்பாடு செய்தல், தொழில் பூங்காக்களில் ஏற்றுமதிச் செயல்முறைகள் குறித்த விழிப்புணர்வுக் கூட்டங்கள் மற்றும் பயிலரங்குகளுக்கு ஏற்பாடு செய்தல், வளரும் சந்தை வாய்ப்புகள் குறித்த ஆய்வுகளை மேற்கொள்ளுதல், ஏற்றுமதி ஆலோசனை சேவைகள் செய்தல் போன்றவற்றிற்கு இக்குழு ஆதரவளிக்கும்.

23. தொழில்நுட்பப் பாதுகாப்பு மற்றும் தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டம்

மின்னணு மற்றும் தகவல், தொலைத் தொடர்பு தொழில்நுட்பம் ஆகிய பிரிவுகளில் செயலாற்றல் கொண்ட தொழில்நுட்பப் பாதுகாப்பு மற்றும் தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டம் (Technology Incubation and Development of Entrepreneurs) ஒன்றினை தமிழ்நாடு தொழில்நுட்ப வளர்ச்சி மையம் மூலமாக தமிழக அரசு ஏற்படுத்தி நிர்வகிக்கும். தொடக்க நிலையில் அனுபவமில்லாத குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களில் புதுமையான தொழில்நுட்பத்தைப் புகுத்தி அவற்றை சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையில் வளர்ச்சியடையச் செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம், இந்தியாவில் வளர்ச்சி அடைந்த புதுமையான தொழில்நுட்பங்களை தொழில் முனைவோர்களுக்கு அறிமுகப்படுத்துவதுடன், மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்கள் / விளக்கப்பட்ட கொள்கைகளை வணிகப்படுத்துவதற்காக விரிவான மற்றும் ஒருங்கிணைந்த சேவைகளையும் அளிக்கும். மேலும், இளம் தொழில் நிறுவனங்கள் நீடித்திருப்பதற்கான ஆதரவையும் சேதப்படக்கூடிய காலமான தொடக்கக் காலத்தில் அவை வளர்ச்சி அடைவதற்கான ஆதரவையும் இத்திட்டம் அளிக்கும்.

[2010 மே 3

24. புரிந்துணர்வு ஒப்பந்த முறை

பொதுத் துறை நிறுவனங்களின் செயல்பாட்டினை சீர்படுத்தி அவை வளர்ச்சி அடைவதற்கான உத்வேகத்தை அளிப்பதற்காக அந்நிறுவனங்களை முறையாகக் கண்காணிப்பது அவசியமாகும். இவ்வகையில், தொழில் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டில் உள்ள பொதுத் துறை நிறுவனங்களைக் கண்காணிப்பதற்கு புரிந்துணர்வு ஒப்பந்த முறை (Memorandum of Understanding) பின்பற்றப்படும். இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில், பொதுத் துறை நிறுவனங்கள் அடைய வேண்டிய கொள்கைகள், செயலாக்கத் திட்டங்கள், அணுகுமுறை மற்றும் இலக்குகள் குறிப்பிடப்பட்டு அவற்றை அரசு ஆண்டுக்கு ஒருமுறை ஆய்வு செய்யும். இம்முறையினால், பொதுத் துறை நிறுவனங்கள் தங்களுடைய வலிமையையும் பலவீனங்களையும் புரிந்து கொண்டு இடையிடையே தேவைப்படுகின்ற மாற்றங்களை செய்து கொண்டு நல்ல வளர்ச்சி காண்பதுடன் நல்ல முறையிலான பணியாக்கத்தை உறுதி செய்ய முடியும்.

25. நிறுவன சமூகப் பொறுப்பு

நமது மாநில பொதுத் துறை நிறுவனங்கள் செயல்படும் இடங்களில் உள்ள சமுதாய மக்களின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிக்க நிறுவன சமூகப் பொறுப்பு (Corporate Social Responsibility) குறிக்கோளாக அமைகிறது. மாநிலத்தில் உள்ள நிறுவனங்கள், சமுதாயத்தில் செய்ய வேண்டிய சமூகப் பொறுப்பினை நிறைவேற்றும் பொருட்டு, நிறுவன சமூகப் பொறுப்பு நடவடிக்கைகளை வழக்கமான ஒரு நடவடிக்கையாக மேற்கொண்டாக வேண்டும். நமது மாநிலத்தில் பொதுத் துறை நிறுவனங்களாகவுள்ள தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், சிப்காட் போன்ற நிறுவனங்கள் 2010-2011 ஆம் ஆண்டில் சமூகப் பொறுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக முறையே 3 கோடி ரூபாயும் 17 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்து முன்னோடியாக விளங்குகின்றன. தொழில் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள இதர பொதுத் துறை நிறுவனங்கள் நிறுவன சமூகப் பொறுப்புத் திட்டத்தை உருவாக்கி அந்நடவடிக்கைகளை நிறுவனத்தின் வழக்கமான ஒரு செயலாக்கமாகக்கொண்டு அதனதன் இலாபத்தில் குறைந்தபட்சம்

2010 மே 3]

மூன்று விழுக்காட்டினை நிறுவன சமூகப் பொறுப்பு நடவடிக்கைகளுக்கு ஒதுக்கீடு செய்யும்.

26. மாநிலக் கனிமக் கொள்கை

அறிவியல் பூர்வமான சுரங்கத் தொழில் நடவடிக்கை மற்றும் நீண்ட கால வளர்ச்சி ஆகியவற்றின் அவசியத்தினைக் கருத்தில் கொண்டு, கனிமங்களை வெட்டியெடுக்கவும் ஒருங்கிணைந்த நிலைத்த மேலாண்மை செய்திடவும், ஒரு நீண்டகால கொள்கை உருவாக்கப்படவேண்டியது தேவையான ஒன்றாகும். சுற்றுச்சூழலை கருத்தில் கொண்டும், முழுமையான கனிம பயன்பாடு மற்றும் மாறிவரும் தொழில் தேவைக்கு ஏற்பவும், தொழில் முனைவோருக்கு பயன்படும் வகையிலும், தேசிய கனிம கொள்கையினைச் சார்ந்து ஒரு புதிய "தமிழ்நாடு கனிமக் கொள்கை" இந்த ஆண்டு வெளியிடப்படும்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS